# தற்காலத் தமிழில் சொல்லாக்க முறைகள்
# (Types of Word formation in Tamil)

**பேரா. ச . இராசேந்திரன்**

**மொழியியல் துறை**

**தமிழ்ப் பல்கலைகழகம்**

**தஞ்சாவூர்**

# சொல்லாக்கம்: சில அடிப்படைக் கருத்துக்கள்



# தமிழில் சொல்லாக்கம்

பொதுவாகச் சொல்லாக்கத்தைப் பின்வருமாறு பகுக்கலாம்:

- **கூட்டாக்கம்**
- **முன்னொட்டாக்கம்**
- **பின்னொட்டாக்கம்**
- **மாற்றம்**
- **பின்வடிவாக்கம்**
- **கத்திரிப்பாக்கம்**
- **கலப்பாக்கம்**
- **தலைப்பெழுத்தாக்கம்**
- **சொல் உருவாக்கம்**

# கூட்டாக்கம்

- கூட்டாக்கங்களை மரப்பிலக்கணப்படி தொகையாக்கம் எனக் கூறலாம்.
- பொதுவாகக் கூட்டாக்கங்களை அவை வாக்கியத்தில் பங்குபெறும் செயற்பாடுகள் அடிப்படையில் பெயர்கள், வினைகள், பெயரடைகள், வினையடைகள் என வகைப்படுத்தல்லாம்.

# கூட்டாக்கம்

- கூட்டுகளின் உள்வகைப்பாடுகள் பல வழிகளில் செய்யப்படுகின்றன:
  1. கூட்டுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படும் சொற்களின் வடிவ வகுப்புகளின் அடிப்படையில்
  2. பொருண்மை வகுப்புகள் அடிப்படையில்
  3. கூட்டுகளாக வரும் சொற்களை இணைப்பவைகளாகப் கருத்தப்படும் சூழ்நிலை இயக்கிகள் அடிப்படையில்
  4. ஆழ்நிலை தொடரியல் செயற்பாடுகள் அடிப்படையில்.
  5. உருப ஒலியனியல் அடிப்படையில்
  6. மற்றும் பிற வழிகளில்

# கூட்டாக்கம்

- தமிழில் பெரும்பான்மையான கூட்டாக்கங்கள் பெயர்களாகும்.
- அதற்கு அடுத்தபடியாக வினைகள் அமையும்.
- இரண்டிற்கு அதிகமான சொற்களைக் கொண்ட கூட்டாட்டங்களை ஈரிணையான கூட்டாங்களாகப் பகுப்பாய்வு செய்யலாம்.

# கூட்டாக்கம்

கூட்டுப் பெயர்கள்

பெயர் + பெயர்

- உள்வட்டக் கூட்டுகள்

  பொதுப் பெயர் + பொதுப் பெயர்

  திரைப் படம், பகல் கனவு, இதய நோய்

  சிறப்புப் பெயர் + பொதுப் பெயர்

  அண்ணாநடை, காந்திவழி

- நேரியயைபு கூட்டுகள்

  பெண் வழக்கறிஞர், பெண் மருத்துவர்

- உம்மைத் தொகைக் கூட்டுகள்

  மரஞ்செடிகொடிகள், புல்பூண்டுகள், ஆடுமாடுகள்

- வெளிவட்டக் கூட்டுகள்

  கால்நடை, பள்ளிக்கூடம், வேலைப்பாடு.

# கூட்டாக்கம்

வினை + பெயர் > பெயர்

பெயர் + வினை > பெயர்

இடைச் சொல் + பெயர்

வினையடை + பெயர் > பெயர்

- தொடர் கூட்டுகள்

  பாறாங்கல், கூழாங்கல், பழிக்குப் பழி, ஆயிரத்தில் ஒருவன், முடிசூடா மன்னன்

- இரட்டு கூட்டுகள்

  அரிசிகிரிசி, புலிகிலி, காப்பிகீப்பி

# கூட்டாக்கம்

கூட்டுவினைகள்

பெயர் + வினை > வினை

வெள்ளையடி, போராடு

வினை+வினை > வினை

ஒப்புக்கொள், சொல்லிக்கொடு, கண்டுபிடி

# ஒட்டாக்கம்

முன்னொட்டாக்கம்

அசுத்தம், அநியாயம், அசாதாரணம்

பின்னொட்டாகம்

1.பெயராக்கம்

1.1 பெயரிலிருந்து பெயர்

பெயர்+ கார்-அர்/அன்//இ

வேலைக்காரர், வேலைக்காரன், வேலைக்காரி

1.2. வினையிலிருந்து பெயர்

தொழிற் பெயர்

ஓட்டம், வரவு

வினையாலணையும் பெயர்

படித்தவன், படிக்காதவன்

# ஒட்டாக்கம்

இடைச் சொற்களிலிருந்து பெயர்

ஒ+ஒட்டு > ஓர், ஒருவன், ஒருத்தி, ஒருவர், ஒன்று, ஒற்றை, ஒவ்வொரு

மூ +ஒட்டு> மூன்று, மூவர்,

முன்+ ஒட்டு> முன், முன்னால், முன்னர், முன்னோர், முன்னவன்,

# மாற்றம்

ஒரு சொல் வகுப்பு எந்தவித வடிவ மாற்றமும் அடையாமல் வேறு ஒரு சொல் வகுப்பாக மாற்றம் அடைவது மாற்றமாகும்.

அடி, உதை,

# பின்னாக்கம் (Back-formation)

- ஆங்கிலத்தில் editor என்ற பெயரிலிருந்து edit என்ற வினையும் contraception என்ற பெயரிலிருந்து contracept என்ற வினையும் ஆக்கப் பெறுவதைப் பின்னாக்கம் (back-formation) என்பர்.
- தமிழில் இத்தகைய பின்னக்கங்கள் இல்லையென்றாலும் சமஸ்கிருதத்திலிருந்து கடன்வாங்கப்பட்ட சில பெயர்களிலிருந்து வினைகள் ஆக்கப்பெறுவது ஒருவித பின்னாக்கத்தை வெளிப்படுத்தும்.

  எ.கா.

  விசாரணை > விசாரி

  போதனை > போதி

# கத்திரிப்பாக்கம் (Clipping)

- ஒரு அகராதிச் சொல் (தனி அல்லது கலப்பு) குறுகி அதே சமயம் அதன் பொருண்மையும் வடிவ வகுப்பும் மாறாது வருவது கத்திரிப்பாக்கமாகும்.

  ஆங்கில எடுத்துக்காட்டு:

  mimeograph> mimeo, pornography> porno, professor> prof

- தமிழில் இம்மாதிரி கத்திரிப்பாக்கங்கள் இல்லை என்றாலும் எளிமை கருதிய பல எளிமையாக்கங்களைக் காணலாம்.

  1. ஆட்சியாளர் > ஆட்சியர், முதலமைச்சர் > முதல்வர், செயலாளர் > செயலர், உயிரினங்கள் > உயிரிகள்

  2. புதுக்கோட்டை > புதுவை, புதுச்சேரி > புதுவை, திருநெல்வேலி > நெல்லை, கோயம்புத்தூர் > கோவை.

# கலப்பாக்கம் (Blend)

- ஒரு சொல்லின் ஒரு பாகமும் மற்றொரு சொல்லின் ஒரு பாகமும் சேர்ந்து ஒரே சொல்லாக ஆக்கம் பெறுவது கலப்பாக்கமாகும்.

  ஆங்கில எடுத்துகாட்டு:

  baloon + parachute > balute, break-fast + lunch > brunch

- தமிழில் இத்தகைய கலப்பாக்கம் இல்லை. ஆனால் ஆங்கிலம் அல்லது சமஸ்கிருதச் சொல்லும் தமிழ்ச் சொல்லும்/விகுதியும் சேர்ந்து ஆக்கப் பெறும் கடன் கலப்புகள் தமிழில் காணப்படுகின்றன.

  எ.கா.

  ரயில் நிலையம், போலீசார், பிரதமர்

# தலைப்பெழுத்தனாக்கம் (Acronym)

ஒரு தலைப்பு அல்லது தொடரில் வரும் சொற்களின் முதல் எழுத்துகளைக் கொண்டு ஆக்கப்பெறும் சொல்லைத் தலைப்பெழுத்தன் என்பர்.

எ.கா. திராவிட முன்னேற்றக் கழகம் > திமுக, ஐக்கிய நாடுகள் > ஐநா, கிறிஸ்து பிறந்த பின் > கி.பி.

ஆங்கிலத் தலை பெழுத்தன்கள் தமிழிலும் பயன் படுத்தப்படுகின்றன.

எ.கா. யுனஸ்கோ, டிவி, கிமீ

# முடிவுரை

தமிழில் சொல்லாக்கங்களில் மிகவும் பரவலானவை கூட்டாக்கமும் பின்னொட்டாக்கமும் ஆகும். பல புதிய சொற்கள் கூட்டாக்கங்களால் பெறப்படுகின்றன. பெயர் + பெயர் கூட்டக்கங்கள் விளைவாகமாகும். புதிய வினைகள் பெயர்+ வினை(யாக்கி) என்ற கூட்டக்கத்தால் பெறப்படுகின்றன. பல நுண்மைப் பெயராக்கங்களுக்குப் வினையடிகள் காரணமாகின்றன.